Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 73 | திங்கட்கிழமை 07 பெப்ரவரி 2022 | தை 25 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

இன்றைய தினம் க.பொ.த. உ/த பரீட்சை எழுதும் மாணவர்கள் அனைவருக்கும் உதயனின் உளப்பூர்வமான வாழ்த்துக்கள்.

## வடகொரிய ஆயுத விவகாரம்:

# சர்வதேச விசாரணையை தமிழர்கள் கோரமுடியாது

### கருத்தை மீளப் பெறப்போவதில்லை: ஆனாலும் கிளறவேண்டாம் என்கிறார் பஸில்



**யாழ்ப்பாணம், பெப்ரவரி 7**

**வடகொரியாவிடம் நாம் ஆயுதம் வாங்கிய நடவடிக்கை சட்ட விரோதமானது அல்ல. எனது இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழர் தரப்புக்கள் சர்வதேச விசாரணையை ஒருபோதும் கோரமுடியாது - இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.**

15 ➤

## கர்ப்பிணிக்கு தீக்காயங்கள்!

யாழ்ப்பாணம், பெப். 7

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 4 மாத கர்ப்பிணிப் பெண் ஒருவர் தவ

15 ➤

## சதொசவிடமிருந்து நிவாரணப் பொதி

கொழும்பு, பெப். 7

லங்கா சதொச நிறுவனம் 998 ரூபாவுக்கு அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய புதிய நிவாரணப் பொதியொன்றை

15 ➤

## மீண்டும் ஏறியது பெற்றோல் விலை!

கொழும்பு, பெப். 7

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் பெற்றோலின் விலையை அதிகரிப்பதாக அறிவித்துள்ளது. ஒரு லீற்றர்

15 ➤

## மின்துண்டிப்பு தொடர்பில் இன்று முக்கிய தீர்மானம்

### பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தகவல்

கொழும்பு, பெப். 7

மின் பாவனைக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் தேவைக்கமைய மின் விநியோகத்தை துண்டிப்பது தொடர்பில் இன்று தீர்மானிக்கப்

15 ➤

## இந்திய - இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் புதுடில்லியில் இன்று சந்திப்பு

கொழும்பு, பெப். 7

இந்தியாவுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேரா

15 ➤



### முச்சந்தி முரளி

"ஏதோ இவை கூட்டம் வைச்சுத்தான் கரண்டை கட் பண்ணுற ஆக்கள் மாதிரியெல்லோ அறிக்கை விடுகினம். இப்ப மட்டும் கரண்ட் ஒழுங்கா வருகுதாமோ..?"

## மின்தடையின் பின்னணி; எதிர்க்கட்சிகளின் சதியே!

### அமைச்சர் ஜோன்ஸ்டனின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, பெப். 7

தற்போதைய மின்துண்டிப்பின் பின்னால் ஏதோ ஒரு விடயம் இருக்கின்றது என்பதை மக்கள் இன்னமும் உணரவில்லையா? இதன்

15 ➤

## தமிழக பக்தர்களும் கச்சதீவு வர அனுமதி

### மீனவர் பேச்சுக்கும் அங்கு ஏற்பாடு என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், பெப். 7

கச்சதீவு திருவிழாவில் இந்திய பக்தர்கள் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று உறுதியளித்

15 ➤

## இந்திய மீனவர் படகுகள் காரைநகரில் இன்று ஏலம்

யாழ்ப்பாணம், பெப். 7

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்ததாக கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் 105 படகுகள் இன்று தொடக்கம் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. காரைநகர் துறைமுகப் பகுதியில் இன்று ஏலம் ஆரம்பமாகின்றது.

15 ➤



## ஆறு வயதுச் சிறுவனை காவு வாங்கியது விபத்து

மன்னார், பெப். 7

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் 6 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். மேலும் மூன்று

15 ➤

### அமைச்சர்கள், பிக்குகள் புடைசூழ –

## குருந்தூர் மலையில் இரவிரவாக 'பிரித்' ஓதல்

### தமிழ்க் கட்சிகளின் உள்நுழைவுக்கு பதிலடியா?

முல்லைத்தீவு, பெப். 7

தொல்லியல் அகழ்வு இடம்பெற்று விகாரை அமைக்கப்பட்டுவரும் முல்லைத்தீவு, குமுழமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர்மலைக்கு வனஜீவராசிகள், வன பாதுகாப்பு அமைச்சர் சி. பி.ரத்நாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜனசுமன ஆகியோர்

15 ➤

## வடக்கில் நெல் விளைச்சல் அரைவாசியாகக் குறைவு!

### விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

வடக்கு மாகாணத்தில் வருடாந்தம் மூன்றரை லட்சம் மெற்றிக் தொன் நெல் விளைச்சல் பெறப்படும். ஆனால் இம்முறை இரண்டு லட்சம் மெற்றிக் தொன் அளவிலேயே விளைச்சல் கிடைத்துள்ளது -இவ்வாறு வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார். அவர் மேலும்

15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலை நோக்கி காய்நகர்த்தும் அரசாங்கம்

**கொழும்பு, பெப்.7**

**நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலை நடத்த முடிவு செய்துள்ள அரசாங்கம், அதற்கான இரண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

முதல் நடவடிக்கையாக, புதிய அரசமைப்புச் சட்ட வரைவை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளது. புதிய அரசமைப்புச் சட்ட வரைவை அரசாங்கம் ஒக்ரோபர் மாத இறுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

அதனூடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் சில மாற்றங்களைச் செய்யவும், வடக்கு- கிழக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் ஊடாக மக்களுக்கு பெரியளவில் நிவாரணங்களை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தேர்தலுக்கான அரசாங்கத்தின் இரண்டாவது துருப்புச் சீட்டு என்று கூறப்படுகின்றது. இந்த நிவாரணங்கள் ஊடாக இழந்து வரும் மக்களின் ஆதரவை மீண்டும் பெற்று, தேர்தலுக்கு செல்வது என்பது அரசாங்கத்தின் திட்டம் என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 5 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். (எ-இ)

**கரைதுறைப்பற்று கூட்டுறவுச் சங்கத்திலிருந்து**

## 7ஆயிரம் கிலோ அரிசி அச்சுவேலி சங்கத்துக்கு

முல்லைத்தீவு, பெப். 7

கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து 4 ஆயிரம் கிலோ கோறாப்பச்சை 3 ஆயிரம் கிலோ ஆட்டக்காரி அரிசி என்பன அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. வடக்கு மாகாண மக்களுக்கு நியாயமான விலைக்கு அரிசி கிடைப்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்த அரிசிக் கொள்வனவும் இடம்பெற்றுள்ளது -என்று வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார். (ம)

**நெல் கொள்வனவுக்காக**

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலும் ரூபா25 மில்லியன்

### வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

வடக்கு மாகாண மக்களுக்கு நியாயமான விலைக்கு அரிசி கிடைப்பதற்கு, கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, நெல் கொள்வனவுக்கென தெரிவுசெய்யப்பட்ட சங்கங்களுக்கு 25 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி வடக்கு மாகாணத்தில் அரிசி ஆலைகள் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உணவு ஆணையாளர் திணைக்களத்திடம் இருந்து 15மில்லியன் ரூபா பெறப்பட்டு மேற்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. தற்போது மேலதிகமாக 25 மில்லியன் ரூபா பெறப்பட்டு அந்தச் சங்கங்களுக்கு பகிரப்பட்டுள்ளன- என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ 3 வாகனங்களுடன் மோதியது!

யாழ்ப்பாணம், பெப். 7

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர் கோயில் வீதியில் கட்டுப்பாட்டையிழந்த முச்சக்கரவண்டி மூன்று வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் இருந்து கோப்பாய் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று கட்டுப்பாட்டையிழந்து, சங்கிலியன் ஒழுங்கை சந்திக்கு அண்மையில் மோட்டார்சைக்கிள் ஒன்றை மோதியதோடு நல்லூர் கோயிலை நோக்கிப் பயணித்த காருடன் மோதி, பின்னர் மற்றுமொரு காருடனும் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

ஏனைய வாகனங்களில் பயணித்தவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை. விபத்துடன் தொடர்புடைய நான்கு வாகனங்களும் சேதமடைந்துள்ளன. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-ரி1,125)



## திரைப்படத்துறை படைப்பாளிகளுக்கு இருநாள்கள் பயிற்சிப் பட்டறை!

யாழ்ப்பாணம், பெப். 7

'தடம்' அமைப்பின் ஏற்பாட்டில் இளம் திரைப்படத்துறை சார்ந்த படைப்பாளிகளின் திறமைகளுக்கு களம்கொடுக்கும் முகமாக இருநாள் வதிவிடப் பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தேசிய ரீதியில் வெளிப்படையாக நடைபெற்ற குறும்படப் போட்டியில் பல்வேறு மாவட்டங்களின் சார்பாக போட்டியிட்ட 37 குறும்படங்களில் தெரிவுசெய்யப்பட்ட 6 குறும்படங்களின் தயாரிப்புக் குழுக்களுக்கான திரைத்துறை சார்ந்தோர் இதில் பங்குபற்றினர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைநெறிகள் பிரிவின் தலைவர் கலாநிதி எஸ்.ரகுராம், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்டத்துக்கான கலாசா உத்தியோகத்தர் ஆர்.கிருஸ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்தப் பயிற்சியின் பின் பங்குபற்றிய குழுக்களுக்கு தலா 50ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதுடன் மேலும் தரமான இறுதிப் படைப்பை உருவாக்கும் வெற்றிக்குரிய ஒரு குழு தெரிவு செய்யப்பட்டு அதற்கு 5 லட்சம் ரூபா பணப்பரிசு வழங்கப்படவுள்ளது.

குறித்த பயிற்சிநெறியில் கொழும்பு, பதுளை, பொகவந்தலாவை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்கள் சார்பாக பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர். (ம-ச)

## ஐஸ் வைத்திருந்த இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.7

ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், ஏழாலையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 22 மற்றும் 29 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 3 கிராம் 58 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.7

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 52 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை நல்லூர்ப் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும்,அவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 62 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸார், அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 நாள்களில் 197 தொற்றாளர்கள்

# மன்னாரில் சடுதியாக கொரோனா அதிகரிப்பு

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவிப்பு

மன்னார், பெப். 7

**மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:
மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் கடந்த 5 நாள்களில் மன்னார் மாவட்டத்தில் 197 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தற்போது வரை 3 ஆயிரத்து 581 கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். 36 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் -என்றுள்ளது. (ம-56)

## தென்மராட்சியில் மீண்டும் வேகமெடுக்கும் கொரோனா

சாவகச்சேரி, பெப். 7
தென்மராட்சிப் பிரதேசத்தில் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.
கடந்த முதலாம் திகதி முதல் நான்காம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 42 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு காய்ச்சல் காரணமாகச் சிகிச்சைபெற வருவோருக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் பலருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் விழிப்புணர்வு இல்லாத செயற்பாடே கொரோனாத் தொற்று வேகமாகப் பரவலடையக் காரணம் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். தற்போது நாட்டில் ஒமிக்ரோன் திரிபு வேகமாகப் பரவிவரும் நிலையில், பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை. கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதில் ஆர்வம் காட்டாது மக்கள் செயற்படுகின்றனர்.
பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைச் சரியாகப் பின்பற்றவேண்டும் என்றும், தடுப்பூசி ஏற்றிக்கொள்வதை உறுதிப்படுத்துவதுடன் பூஸ்டர் தடுப்பூசியையும் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-9)

## மன்னாரில் பூஸ்டர் ஏற்றும் இராணுவம்



மன்னார், பெப். 7
மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
53ஆவது டிவிஷன் படைப்பிரிவால் நேற்றுக் காலை மன்னார் புதிய பஸ் நிலையப் பகுதியில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
பெரியமடு, பாலம்பிட்டி, விடத்தல்தீவு, இலுப்பைக்கடவை, பேசாலை, தலைமன்னார் ஆகிய இடங்களிலும் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-213)

## சாவகச்சேரி பொதுச்சந்தையில் கொரோனாத் தடுப்பூசி



சாவகச்சேரி, பெப். 7
சாவகச்சேரி பொதுச்சந்தையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.
அண்மைக்காலமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
இதனால் வர்த்தக நிலையங்கள், சந்தை விற்பனை அலகுகள் என்பனவற்றுக்குச் செல்லும் சுகாதாரப் பகுதியினர் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளனவா என்று பரிசோதித்து வருகின்றனர்.
கொரோனாத் தடுப்பூசிகளைப் பெறாதவர்களுக்கு அவற்றை ஏற்றும் செயற்பாடுகள் பல இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இதன் ஒரு பகுதியாக சாவகச்சேரி பொதுச்சந்தையில் நேற்றுமுன்தினம் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. (வ-9)





**யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிப் பக்கம் கிட்டடியில பட்சி ஒருக்கா பறந்து பாத்திச்சு. அங்க ஒரு வார்ட். ஒரு கட்டிலும் மிச்சம் வைக்காமல் எல்லாத்திலையும் வருத்தக்காரர். பக்கத்தில அவையைப் பராமரிக்கிற சொந்தக்காரர். அவைதான் வருத்தக்காரருக்கு சாப்பாடு குடுக்கிறது, மலசலகூடத்துக்கு கூட்டிக் கொண்டு போய் வாறது, டொக்டர்மார் கூப்பிடேக்க போய் மருந்து வாங்கிக் கொண்டு குடுக்கிறது எண்டு முழுப்பணிவிடையும் செய்யிறது. அப்பிடி ஓடி ஓடி பணிவிடை செய்துபோட்டும், கொஞ்சம் ஆறுதலா அவை ஒருநிமிசம்கூட இருக்கமுடியாது. அப்பிடி இருக்கிறதுக்குரிய ஒரு ஏற்பாடும் இல்லை.**

**ஒரு கதிரை இருந்தாலாவது, கால் உளைவு போக கொஞ்ச நேரம் இருக்கலாம். ஆனால் அப்பிடி ஒரு கதிரையைக் கண்ணாலயும் காண முடியாது. வருத்தக்காரரின்ர கட்டிலின்ரை ஒரு ஓரமாக இல்லாட்டி பக்கத்து கட்டில் வெறுமையா இருக்குதெண்டு நினைச்சு அதில கொஞ்சம் காலாறுவம் எண்டு பராமரிக்கப் போனவை ஏறி இருந்திச்சினம் எண்டால், அவ்வளவுதான். உடனேயே நேர்ஸ்மார் கண்டபடி பேசி ஆளைக் கீழ இறக்கிப் போடுவினம். அதால அடுத்த ஆள் வந்து விடுமட்டும், வருத்தக்காரரைப் பராமரிக்கப் போன சொந்தக்காரர் அப்பிடியே பிடிச்சு வைச்ச சிலை மாதிரி நிக்கவேண்டியது தான். உது வருத்தக்காரரைப் பராமரிக்கப் போய், பிறகு புதுசா கால் வருத்தத்தை வாங்கிக் கொண்டு வந்தமாதிரிப் போயிடும்.**

**பெரியாஸ்பத்திரி எண்டில்லை, பொதுவா யாழ்ப்பாணத்தில இருக்கிற எல்லா ஆஸ்பத்திரியளிலையும் இதுதான் நிலைமை. வருத்தக்காரரைப் பராமரிக்க நிக்கிற உறவினரை ஒரு மனுசராக்கூட மதிக்கிறேலை. ஆனால் கிளிநொச்சி, கொழும்பு ஆஸ்பத்திரிப் பக்கம் இப்பிடியில்லை. ஒரு கதிரை எல்லாக் கட்டிலுக்குப் பக்கத்திலையும் இருக்கும். தேவையான உதவியை வருத்தக்காரருக்கு செய்துபோட்டு, அந்தக் கதிரையில பராமரிப்பாளர் இருந்து தன்னைக் கொஞ்சம் 'ரிலாக்ஸ்' செய்யலாம். நோயாளரைப் பாக்க வாறவை வெயிலுக்க லைனில நிக்கக்கூடாது எண்டெல்லாம் அக்கறை எடுத்துச் செய்யிறவை, உள்ளுக்க வார்ட்டுகளில இப்பிடி பகல் முழுக்க கால்கடுக்க நிண்டு பணிவிடை செய்யிற பராமரிப்பாளர்மாருக்கு ஒரு கதிரை குடுக்க வழி செய்ய மாட்டினமோ? ஒருவேளை, அப்பிடி எல்லாக் கட்டிலுக்கும் பக்கத்தில கதிரை போட, ஆஸ்பத்திரிக்கு அரசாங்கம் காசு குடுக்கேலை எண்டால், அதைச் செய்யிறதுக்கு எத்தினையோ தனியார் காத்திருக்கினம். அவையிட்ட போய் உதவி கேட்டாலே, உடன கதிரை கிடைச்சிடும். அவைக்கும் ஒரு புண்ணியமாப் போகும், பராமரிப்பாளருக்கும் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும்.**

**பக்கத்தில உள்ள கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கே வார்ட்டுகளில கதிரை போட வசதி இருக்கெண்டால், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அந்த நிதியை உரிய ஆக்களிட்ட இருந்து எடுக்கிறது பெரிய வேலை இல்லையே.**
**மனம் இருந்தால் மார்க்கமிருக்கு. மனம் வைப்பினமோ..?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்

**முல்லைத்தீவு,பெப். 7**

**விவசாய அமைச்சின் நெல் சந்தைப்படுத்தல் சபை, விவசாயிகளிடம் காய்ந்த தரமான நெல்லை நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கொள்வனவு செய்யும் என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் உதவிப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.**

அதற்கமைவாக சிவப்பு நாடு,வெள்ளைநாடு 92 ரூபாவுக்கும், சம்பா 94 ரூபாவுக்கும், கீரிச்சம்பா 97 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும்.

காய்ந்த நெல்லின் ஈரத்தன்மை 14 வீதத்துக்குக் குறைவாக வும், சப்பி 9 வீதத் துக்குக் குறைவான தாகவும் இருக்கவேண்டும்.

முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை, முறிப்புப்பகுதிகளில்உள்ள நெல் சந்தைப் படுத்தல் களஞ்சியங் களில், விவசாயிகள் நெல்லை விற்பனை செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-19)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 7

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மஹோற்சவம், நாளை 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

மஹோற்சவத்தின் 8 ஆவது நாளான 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 7 மணிக்கு சப்பரத்திரு விழாவும், 16ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறும். அத்துடன், 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் மாலை 4.30 மணிக்கு வைரவர் மடையும் நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் சுகாதார விதி முறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ஒ- ரி1)



# அம்பாள் புகழ் பாடும் இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 7

அரியாலை, வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் புகழ் பாடும், இசை இறுவட்டு 'இத்திமரத் தாயே' என்ற பெயருடன் வெளியிடப்பட்டுள்ளது.

வெட்டுக்குளம் மண்ணின் மைந்தர்களான எம். வி.கே.குமணா, க.கனகராசா, த.தர்மேந்திரா, எஸ். என்.விஜிகாந்தன், கி.விதுஷிகா ஆகியோர் பாடல்களை எழுதியுள்ளனர்.

தென்னிந்திய இசை அமைப்பாளர் ஏ.சி.தினகரனின் இசையில் தென்னிந்தியப் பாடகர்களான மதுபால கிருஷ்ணன், சுர்முகி, சத்தியபிரகாஷ், மாலதி, வேல் முருகன், அனுராதா ஸ்ரீராம், மகாலிங்கம், உன்னி கிருஷ்ணன், வாணி ஜெயராம் ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர். (ஒ-4-இ)

# தனியாரிடமிருந்து மின்சாரம் 50 முதலீட்டாளர்கள் தெரிவு

கொழும்பு,பெப்.7

சூரிய மற்றும் காற்றாலை மின்சாரத்தைத் தனியாரிடம் இருந்து பெறுவதற்கு மின்சக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 50க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தத் திட்டத்தின் ஊடாக அடுத்த வருடத்துக்குள் ஆயிரம் மெகாவாட்ஸ் சூரிய மற்றும் காற்றாலை மின்சாரம் தனியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும்.

ஏற்கனவே பெறப்பட்ட 45 மெகாவாட்ஸ் சூரியசக்தி மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் ஒருங்கிணைக்க இலங்கை மின்சாரசபை பொறியியலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

6 மாதங்களுக்கு தனியாரிடம் இருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

பெப்ரவரிமுதல் ஏப்ரல் வரையிலான மாதங்களில் மழை குறைவதால் நாட்டில் நீர்மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்படும். ஏப்ரல் மாதம்வரை தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் - என்றார். (ஒ-4-இ)



# ஆண்டு நிறைவும் பரிசில் வழங்கலும்

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்புமாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில், 'கரங்கள்' சஞ்சிகையின் 7ஆவது இதழ் வெளியிடப்பட்டது. அத்துடன், 4 வயதிலிருந்து வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு மரக்கறிகளை அயலவர்களுக்கு வழங்கி வரும் 7வயது வாசகரான பரமானந்தன் ஆர்காசன் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். (ஒ-ரி1-159)

# இலவச கண் பரிசோதனையும் கண்ணாடிகள் வழங்கலும்

முல்லைத்தீவு, பெப். 7

தண்ணீரூற்று - முள்ளியவளையைச் சேர்ந்த அமரர் அப்பாத்துரை புஸ்பராசாவின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு, அவரின் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் இலவச கண்பரிசோதனையும் மூக்குக்கண்ணாடிகள் வழங்கலும் நடைபெற்றன.

'தாய்த்தமிழ்' பேரவையின் ஆதரவோடு அமரர் புஸ்பராசா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில், விஷன்கெயர் நிறுவனத்தின் கணினி மூலமான கண்பரிசோதனை மூலம் 249 பேருக்கு இலவச கண்பரிசோதனை செய்யப்பட்டு, 221பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதோடு புஸ்ப ராசாவின் குடும்பத்தினரின் பரிந்துரையில் 28பேர் மேலதிக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டனர். தாய்த்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.ரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தாய்த்தமிழ் பேரவையின் தலைவர் சி.நாகேந்திர ராசா, முல்லைத்தீவு மாவட்டச்செயலர் விமலநாதன், மருத்துவ கலாநிதி நிரோஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ- ரி1-19)



# போக்குவரத்து பொலிஸாரின் பணி வட்டுவாகல் பாலத்தடியில் தேவை




முல்லைத்தீவு, பெப். 7

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தில் போக்குவரத்து பொலிஸார் பணியில் ஈடுபட வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.ஹஜிதரன் கோரிக்கை விடுத்துள்ளார். வட்டுவாகல்பாலம் சேதமடைந்துள்ளதால் வாகனங்கள்அதனூடாக பயணிப்பதில் நெருக்கடி தோன்றியுள்ளது. மாலை 6மணி தொடக்கம் இரவு 10மணி வரை போக்குவரத்து பொலிஸார் பணியில் ஈடுபடுவதன் மூலம் இந்த வாகன நெருக்கடியைக் கட்டுப்படுத்தலாம். பாலத்தின் இரு பகுதியிலும் நிலைகொண்டுள்ள கடற்படையினரும் இராணுவத்தினரும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த உதவவேண்டும். இதன்மூலம் விபத்துகளைத் தவிர்க்கலாம். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக வட்டுவாகல்பாலம் புனரமைக்கப்படாமல் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-13)



# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற கணேஷ் இந்துகா தேவியை கௌரவிக்கும் நிகழ்வு, நல்லூர் வீதியில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் இடம் பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-ரி1-20)

# சமுர்த்தி அமைப்பு ஊடாக பல்வேறு செயற்றிட்டங்கள்

சாவகச்சேரி பெப்.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்திச் சங்கங்கள், சமுர்த்தி கிராம மட்ட அமைப்பு என்ற பெயருடன் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளன. பிரதேசத்தில் உள்ள 4 சமுர்த்தி வங்கி வலயங்களின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் பொருட்டு, 60 கிராம அலுவலர் பிரிவுகளில், சமுர்த்தி அமைப்புக்கள் ஊடாக இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இந்த அமைப்புக்கள் முதற்கட்டமாக சமுர்த்திப் பயனாளர்களுக்கு சிறிய கடன்களை வழங்கும். கடன்களை மீளச் செலுத்தும் பயனாளர்களின் செயற்பாடுகள் திருப்தியளிக்கும் பட்சத்தில், 50 ஆயிரம் ரூபா வரை கடனாக வழங்க அமைப்பு பரிந்துரை செய்யமுடியும். அதேவேளை கிராமத்தில் உள்ள மக்களின் சமுர்த்தி முத்திரை மாற்றம், கடன்கள் பரிந்துரை போன்ற பணிகளையும் இந்த அமைப்புக்கள் முன்னெடுக்கும். (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் கடற்கரைகளை சுத்தமாக்கும் செயற்றிட்டம்

**மன்னார், பெப்.7**

**கடற்கரைச் சூழலில் காணப்படும் இயற்கைக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருள்களை அகற்றும் "எமது சூழலை நாமே பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளிலான சிரமதானம் மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.**



மன்னார் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த சிரமதான நடவடிக்கை மன்னார் சௌத்பார் தொடக்கம் தாழ்வுப்பாடு கடற்கரை வரை சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சாந்திபுரம், கீரி, தாழ்வுபாடு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் கிராமமக்களும், மன்னார் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன ஊழியர்கள், நகர சபை சுத்திகரிப்பு பணியாளர்களும் இணைந்து இந்த சிரமதான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சௌத்பார் கடற்கரை தொடக்கம் தாழ்வுபாடுவரை சுமார் 4 கிலோமீற்றர் வரையிலான கடற்கரைப் பகுதி சுத்தம் செய்யப்பட்டதுடன் அனைத்துக் கழிவுகளும் நகரசபையின் ஒத்துழைப்புடன் அப்புறப்படுத்தப்பட்டன.

இந்தச் செயற்றிட்டம் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் மன்னார் பிரதேச செயலக பிரிவிலுள்ள கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-56)



## சுதந்திரதினத்தை முன்னிட்டு மன்னாரில் மரங்கள் நடுகை!

மன்னார், பெப். 7

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, மன்னார் தாராபுரம் பிரதேசத்திலுள்ள கோரைக்குளத்துக்கு அருகில் 100 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நாகாவத்த தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகே, மன்னார் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசாத் ஜெயதிலக, பிரதேச செயலக அலுவலர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-ரி1-213)


## புதையல் தோண்ட முற்பட்ட 6 பேர் கிளிநொச்சியில் கைது



கிளிநொச்சி, பெப். 7

கிளிநொச்சி, இராமநாதபுரம் அழகாபுரி பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கடந்த 4ஆம் திகதி மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே மேற்படி ஆறு பேரும் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களில் ஐந்து பேர் கண்டி திகன பகுதியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். சந்தேகநபர்கள் தருமபுரம் பொலிஸாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர். தடயப் பொருள்களும் பொலிஸாரிடத்தில் பாரப்படுத்தப்பட்டன. (ம-113)



## குற்றச்செயல்கள் தொடர்பில் விழிப்பூட்டல் கலந்துரையாடல்

கொடிகாமம், பெப்.7

சமூகத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் மாணவர்களுடன் விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்று அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது, குற்றங்களில் சிறுவர்கள் ஈடுபடுதல், குற்றங்களுக்கான தண்டனைகள், சிறைக்கைதிகளின் நிலை தொடர்பாக வவுனியா சிறைச்சாலை மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் உதவி அத்தியட்சகர் ந.பிரபாகரன் விழிப்பூட்டல் கருத்துக்களை வழங்கினார். (வ-159)

## பசுக்களின் சரணாலயம் அனலைதீவில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், பெப்.7

அனலைதீவு, புளியந்தீவு நாகேசுவரர் சிவனாலயத்தில் பசுக்களின் சரணாலயம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

அனலைதீவு சைவசமய கலாசாரப் பேரவையின் முயற்சியில் இந்த சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. பேரவையின் தலைவர் சிவத்திரு ப.நடராசா சரணாலயத்தைத் திறந்துவைத்தார். (எ-125)



## சேதனப் பசளை மையம் கண்டாவளையில் திறப்பு

கிளிநொச்சி, பெப். 7

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடு நகர் ரங்கன் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்ட சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

அரசின் விசேட அபிவிருத்தி நன்கொடை நிதியில் 2021ஆம் ஆண்டுக்கான சேதனப் பசளை மற்றும் சேதனப் பீடைநாசினி உற்பத்தித் திட்டத்தின்கீழ் இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சிவகுமார், கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் வேழமாலிகிதன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். மேலும் வீடுகளிலுள்ள சேதனப் பசளைக்குத் தேவையான உக்கக்கூடிய கழிவுகள் இந்த நிலையத்தில் கொள்வனவு செய்யப்படும் என உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-113)



## வட்டக்கச்சியில் வயல் விழா

கிளிநொச்சி, பெப். 7

கிளிநொச்சி, வட்டக்கச்சி பகுதியில் இயற்கை முறையில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்நிலமொன்றில் அறுவடை விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார்.

எந்தவித இரசாயன உரங்களும் பயன்படுத்தாது இயற்கை உரத்தைப் பயன்படுத்தி தனியார் ஒருவரால் 3 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்செய்கைக்கான வயல்விழாவே இவ்வாறு மேற்கொள்ளப்பட்டது. (வ-113)





விசுவமடு மகா வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள குளம், விசுவமடு இராணுவ முகாமொன்றைச் சேர்ந்த சிப்பாய்களால் துப்புரவு செய்யப்பட்டது. இதிலிருந்து பாசி உட்பட சேதனப் பசளைக்கான மூலப்பொருள்களைப் பெற்று பசளை உற்பத்தி செய்யும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபடவுள்ளனர். (வ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தென்மராட்சியில்

# தனிமைப்படுத்தப்பட்டோருக்கு உதவிகள் வழங்கப்படவில்லை

சாவகச்சேரி, பெப். 7

**தென்மராட்சியில் கடந்த ஜனவரி மாதத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தால் இதுவரை எந்தவொரு உதவியும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.**

கொரோனாவால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதார திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் இரு கட்டங்களாக வழங்கப்பட்டு வந்தன.

ஆயினும் கடந்த ஜனவரி மாதம் தென்மராட்சியில் 68 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த போது அவர்களுக்கு எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலகுக்குக் கோரிக்கை விடுத்த போதும் உதவிகள் வழங்குவதற்கான நிதி இன்னும் வந்துசேரவில்லை என்று தெரிவித்தனர். (ஒ-ரி1-9)



## சமுர்த்தி அலுவலகம் இராமாவிலில் திறப்பு

சாவகச்சேரி,பெப்.7

சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், சமுர்த்தி கிராம மட்ட அலுவலகங்கள் தென்மராட்சிப்பிரதேசத்தில் திறக்கப்பட்டு வருகின்றன.

மீசாலை வடக்கு இராமாவில் பிரிவுக்கான அலுவலகம் கடந்த வியாழக்கிழமை திறக்கப்பட்டது.

பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் க. விக்கினேஸ்வரன் அலுவலகத்தைத் திறந்தார்.

நிகழ்வில் சமுர்த்தி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ஒ-4-9)



## ஆரம்ப சுகாதார நிலையம்: கீரி கிராமத்தில் அடிக்கல்

மன்னார்,பெப்.7

கிராம மட்டத்தில் ஒரு லட்சம் பணிகளை நடைமுறைப்படுத்தும் திட்டத்தில், மன்னார் பட்டித்தோட்டம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கீரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நடப்பட்டது.

6லட்சம் ரூபா செலவில் குறித்த ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான முதற் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் பிரதேச செயலர் ம.பிரதீப், மன்னார் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் றொகான், பட்டிதோட்டம் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர், மாதர் ஒன்றிய உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4-213)

## சேதனப்பசளைச் செய்கை வவுனியாவில் வயல்விழா

வவுனியா,பெப்.7

சேதனப்பசளை நெற்செய்கையில் சிறுபோகத்துக்கான பயணம் எனும் தொனிப்பொருளிலான, வயல்விழா வவுனியா முருகனூர் விவசாயப்பண்ணையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மண்புழு உரம், அசோலா தாவரம், கூட்டெரு மற்றும் ஏனைய இயற்கை உரத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை வயல்கள் விவசாயிகளின் பார்வைக்காக விடப்பட்டன. அவர்களுக்கு விளக்கமும் வழங்கப்பட்டது.

பாரம்பரிய முறையிலான பாடல்பாடி அறுவடை செய்யும் முறைமையும் காட்சிப்படுத்தப்பட்டது. சேதனப் பசளையில் உற்பத்தி செய்யப்பட்ட வயல் நிலத்தில் அறுவடையும் மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் வட மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமாரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஒ-4-110)



## மீளமைக்கப்படாத மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான மாணவர் ஒன்றியம், சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக மீளமைக்கப்படாத நிலையில், பட்டத்தைப் பெற்று வெளியேறிய மாணவர்களே தற்போதும் ஒன்றியத்தின் பிரதிநிதிகளாக உள்ளனர்.

இதனால் மாணவர்களின் நலன் குறித்து பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. குறிப்பாக சிற்றுண்டிச்சாலைகளில் உள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை என்று யாழ்.பல்கலைக்கழக இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர் வசந்தராஜ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சிற்றுண்டிச்சாலையின் முன்பாக விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

"சிற்றுண்டிச்சாலையில் உள்ள உணவின் நிறை அளவு. சுவையின் தரம் போன்றவை திருப்தியற்றுக் காணப்படுகின்றன. இவைஉடனடியாகநிவர்த்தி செய்யப்படல் வேண்டும். சுகாதாரச் சீர்கேடுகள் (உணவில்) காணப்படுகின்றன. அத்துடன் சிற்றுண்டிச்சாலையில் வரும் இலாபத்தில் 30 மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கப்பட வேண்டும். ஆரோக்கியமானஉணவுவழங்கப்பட வேண்டும். சிற்றுண்டிச் சாலையின் திறக்கும் நேரம் மூடும் நேரம் அறிவிக்கப்படவேண்டும். விலைப்பட்டியலை உடனடியாக காட்சிப்படுத்த வேண்டும்" என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-4-125)

### இறக்குமதி மீள நடைபெற்றாலும்

## வாகனங்களின் விலை குறைவடையாது!

கொழும்பு, பெப்.7

வாகனங்களை மீண்டும் இறக்குமதி செய்ய ஆரம்பித்தாலும் வாகனங்களின் விலைகள் குறைவடையாது. வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளதால் வாகன உற்பத்தித்துறை பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது - இவ்வாறு இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரெஞ்சிகே தெரிவித்தார்.

வாகன உற்பத்தித்துறை பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதால் வாகன உதிரிப்பாகங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும்போது விலை உயர்வு ஏற்படும்.

எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய டொலர் இல்லாத நிலையில் வாகனங்களை இறக்குமதி செய்வது சாத்தியமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## முடக்கலை ஏற்படுத்தாது தடுப்பூசியை செலுத்தவும்

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆலோசனை

கொழும்பு,பெப்.7

நாட்டை மற்றுமொரு முடக்கலை நோக்கி நகர்த்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எனவே மக்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிப்பதுடன், தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினரான மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவிக்கையில்;

கொரோனாவுக்கு எதிரான மூன்றாவது டோஸைப் பெற்றுக்கொள்ள மக்கள் ஆர்வம் காட்டவில்லை. அரசால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றிச் செயற்படும் எந்த நிறுவனத்தையும் காணக்கூடியதாக இல்லை. தடுப்பூசியைப் பெறுவதில் ஆர்வத்தை மேம்படுத்துவதில் சுகாதார அமைச்சு மற்றும் அரசிடம் உந்துதல் இல்லை. அதன் தீவிரத்தன்மை குறித்த விழிப்புணர்வு இல்லாததால், கடந்த சில வாரங்களாக தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்புகளின் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்துள்ளன - என்றார். (ஒ-4-இ)

## விருதுகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 7

நல்லூர் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவை முன்னிட்டு, கலைஞானச்சுடர் விருது மற்றும் இளங்கலைஞர் விருது வழங்குவதற்கு தகுதி வாய்ந்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று, எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளனர். (ஒ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## யார் குற்றவாளி...?

கடந்த சில நாள்களாக, வழிப்பறிக் கொள்ளைகளும், திருட்டுகளும் அதிகரித்திருக்கின்றன. எங்காவது ஓரிடத்தில், எப்போதாவது நிகழ்ந்துவந்த இந்தக் குற்றச் செயல்கள் ஏககாலத்தில் நாடெங்கும் வாடிக்கையாக நடக்கத் தொடங்கியிருக்கின்றன. நாடு தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, பாழ்பட்டுப் போவதன் அறிகுறியே இந்தக் குற்றச் செயல்கள். இந்த வழிப்பறிகள் அல்லது திருட்டுகளில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்படுபவர்கள் ஒன்றும் தொழில்முறைத் திருடர்கள் அல்லர். குற்றங்களை வெறுமனே மேலோட்டமாக அணுகாது, அந்தக் குற்றங்களின் பின்னுள்ள காரணங்களை அறியும்போது அவை இன்னொரு குற்றம் நிகழாமல் தடுக்க உதவலாம். அப்படி இப்போது பெருகத் தொடங்கியுள்ள வழிப்பறிகளின் பின்னணிக் காரணங்களை விசாரித்தவர்களுக்கு கிடைத்த பதில், 'குடும்பத்தின் பசியைப் போக்க, வேறு வழியின்றி இப்படித் திருட நேர்ந்துவிட்டது' என்பதே . அவர்கள், சொல்வதை ஆமோதிப்பது போலவே நாட்டின் நிலைமை படுமோசமானதாக மாறிக்கொண்டிருக்கிறது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இருந்த பொருள்களின் விலைக்கும், இப்போது அவை விற்கும் விலைக்கும் மடங்குக் கணக்கில் வித்தியாசம். ஒரு குடும்பத்தின் மாதாந்தச் செலவினம் 50 ஆயிரத்தையும் தாண்டிவிட்டது. ஆனால் சம்பள ஏற்றம் எவருக்கும் இல்லை. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் இனிமேல் 5 ஆயிரம் ரூபா மேலதிகமாக வழங்கப்படவுள்ளபோதும், இப்போதுள்ள விலைவாசியை எதிர்கொள்ள அந்த மேலதிகக் கொடுப்பனவு எந்தவிதத்திலும் கைகொடுக்கவில்லை. மடங்குக் கணக்கில் அதிகரித்தபடியே செல்லும் விலைவாசியால், முன்னர் 5 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்த பொருள்களின் அரைவாசியைக் கூட இப்போது வாங்க முடியாது. ஆனாலும், ஏதோ நிவாரணம் கொடுத்து, வரவிருந்த பஞ்சத்தைத் தடுத்துவிட்டதாக அரசாங்கம் தனக்குத் தானே பெருமை பேசிக்கொள்கிறதே தவிர, உண்மையில் நாடு சுடுகாடாகிக் கொண்டிருக்கிறது என்பதே யதார்த்தம்.

வேலைவாய்ப்புகளும் வற்றத் தொடங்கிவிட்டன. அத்தோடு ஏற்றுமதிகள் இன்மையாலும், மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதில் உள்ள நெருக்கடியாலும், டொலர் பிரச்சினையாலும் பல நிறுவனங்கள் தமது ஆளணியைக் குறைக்கும் வேலைகளில் இறங்கியிருக்கின்றன. அதனால் வேலையற்றோர் எண்ணிக்கையும் சடுதியாக வீங்கிப் பெருக்கத் தொடங்கியுள்ளது. வேலைவாய்ப்பின்மை, விலைவாசி, உரிய வேதனமின்மை, வீட்டில் தலையெடுக்கும் பஞ்சம் இவையெல்லாமே ஒன்று திரண்டு தாக்கும்போது, சாதாரண குடிமகனை வழிப்பறி செய்யவைத்து, குற்றவாளியாவதற்கான சந்தர்ப்பங்கள் மிக அதிகம். ஆக,மொத்தம் நாட்டு மக்களையெல்லாம் குற்றவாளிகளாக மாற வைத்த பெருமை கோத்தாபய அரசாங்கத்துக்கே உரியது.

ஒருகாலத்தில் 'இலங்கையைப் போல மாறவேண்டும்' என்று பல நாடுகள் கனவு கண்டன. அப்படிக் கனவு கண்ட சிங்கப்பூர் முதலான நாடுகள் எல்லாம் பொருளாதாரத்திலும், பிரஜைகளுக்கான வாழ்க்கைச் சுட்டெண்ணிலும் எங்கேயோ போய்விட்டன. ஆனால், இலங்கையோ முன்னர் இருந்ததை விடவும், கீழ்நிலையை நோக்கியே சரிந்து கொண்டிருக்கிறது. இப்போதெல்லாம் 'இலங்கையைப் போல நாம் மாறக்கூடாது' என்று பல நாடுகள் நினைக்குமளவுக்கு நாட்டின் நிலைமை படுகேவலமாகிவிட்டது. தேராக நகர்ந்து கொண்டிருந்த ஒரு நாட்டின் பெருமைகளையெல்லாம் நொடிப்பொழுதில் சிதைத்து, அதை தெருவுக்கு கொண்டுவந்து விட்டு, 'ஒற்றையாட்சியைப் பாதுகாப்பேன்' என்று இன்னும் படுகுழிக்குள் வீழ்த்தும் வகையில் நடக்கும் இந்த அரசை என்னவென்பது? உண்மையில் இப்போது பெருகத் தொடங்கியிருக்கும் குற்றங்களுக்காக கைது செய்யவேண்டியது திருடர்களாக மாறிக் கொண்டிருக்கும் மக்களையல்ல, அவர்களை அப்படிக் குற்றவாளிகளாக மாற்றும் வகையில் நாட்டைச் சீரழித்த இந்த அரசாங்கத்தையே...!

**நாளொரு நல்வார்த்தை**

"இந்தக் கணத்தில் சிறந்த ஒன்றைச் செய்வது, அடுத்த கணத்தில் உங்களைச் சிறந்த இடத்தில் வைக்கிறது."

**ஒப்ரா வின்ஃப்ரே**




# ஆட்சியில் ஏற்றியோரையும் ஏமாற்றுகிறார் கோத்தாபய!

## எதிரணித் தலைவர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 7**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தமிழ், முஸ்லிம் மக்களை மட்டுமன்றி தன்னை அரியணை ஏற்றிய சிங்கள மக்களையும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார். இந்தமுறை அவர் ஆற்றிய சுதந்திரதின உரை இதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது - இவ்வாறு எதிரணித் தலைவர்கள் கூட்டாகத் தெரிவித்தனர்.**

எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார ஆகியோர், கொழும்பு சுதந்திரச்சதுக்கத்தில் நடைபெற்ற 74ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

'அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசு நாட்டை நாசமாக்கிக்கொண்டிருக்கின்றது. பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அரியணை ஏறிய ஜனாதிபதி கோத்தாபய, இன்று தப்பிப்பிழைப்பதற்காக மூவின மக்களையும் ஏமாற்றும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். மூவின மக்களையும் பிரித்து அதில் சுயலாப அரசியல் தேடுவதிலேயே இந்த அரசு குறியாக வுள்ளது. ஜனாதிபதியின் சுதந்திரதின உரை வேடிக்கையாகவுள்ளது. மக்களுக்கான உரிமைகளைத் தட்டிப் பறித்துவிட்டு அவர்களைப் பொறுப்புடன் நடக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

இது எந்தவகையில் நியாயமானது? அடிமை வாழ்க்கை வாழ இந்த நாட்டு மக்கள் எவரும் தயாராகவில்லை. இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே மக்களின் விருப்பம். அதை மக்கள் விரைவில் செய்வார்கள்'- என்றனர். (ம-22)

# ஒரு கோடி ரூபா பெறுமதியான 'ஐஸ்' போதை மன்னாரில் மீட்பு

## சந்தேகநபர்கள் மூவர் கைது

மன்னார், பெப். 7

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருக்கலம்பிட்டி பகுதியில் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், பணங்கட்டுக்கொட்டு பகுதியைச் சேர்ந்த இருவரும் பேசாலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவர்களை மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம-213)

**நாளை** 08.02.2022 செவ்வாய்க்கிழமை தை 26

சுபநேரம் : 11.05 - 12.35

ராகுகாலம் : 03.35 - 05.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் சேவையிலும், கலை இலக்கியத்துக்காகவும், சமூக நலப் பணிகளுக்காகவும் தன் வாழ்வை அர்ப்பணித்த கனகரத்தினம் அரசரத்தினத்தின் நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# மாண்புறு மக்கள் சேவகர் கனகரத்தினம் அரசரத்தினம்

■ காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

யாழ். குடாநாட்டின்முகமாக, முகவரியாக உள்ள காரைநகரின்மேற்கே உள்ள பத்தர்கேணியைச் சேர்ந்த அரச ஊழியரான கனகரத்தினம்- பொன்னுப்பிள்ளை தம்பதியினருக்கு அரசர் 1953ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் கனிஷ்ட பாடசாலையில் கற்றார். பின்னர் தனது தந்தையின் தொழில் நிமித்தமாக அவர் குடியிருந்த அநுராதபுரத்தில் உள்ள விவேகானந்தா மகாவித்தியாலயத்திலும் பின்னர் சென். ஜோசப் கல்லூரியிலும் தன் கல்வியைத் தொடர்ந்தார்.

பாடசாலைகளில் படிக்கும் காலங்களில் விளையாட்டுத் துறையில் மிகவும் ஆர்வமாக இருந்த அரசர் பல பதக்கங்களையும் கேடயங்களையும் தனதாக்கிக்கொண்டார். இந்த ஆர்வத்தின் காரணமாக தேசிய மட்டத்தில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் 1975ஆம் ஆண்டு தன்னைத் தேசிய சம்பியனாக்கிக்கொண்டார். பொலிஸ் துறையில் சேர்ந்த பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் றகர் அணியில் இணைந்து பல போட்டிகளில் விளையாடி பொலிஸ் அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார்.

பாடசாலைக் காலத்தில் விளையாட்டுத்துறையில் மட்டுமல்லாது கலைத்துறையிலும் ஈடுபாட்டைக் காட்டிய அரசர் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற பல்வேறு இலக்கிய விழாக்கள் மற்றும் கலை விழாக்களிலும் பங்குபற்றினார். அரசரின் நகைச்சுவை உணர்வு காரணமாக பல வானொலி தொலைக்காட்சி நிகழ்வுகளில் பங்கு பற்றியதோடு மட்டுமல்லாது பல்வேறு கலை, இலக்கிய பண்பாட்டுச் செயற்பாடுகளில் இயங்கிய பல்வேறு நிறுவனங்களோடும் தன்னை இணைத்துக்கொண்டு செயற்பட்டார். குறிப்பாக அகில இலங்கை நகைச்சுவை மன்றத்தின் தலைவராகப் பல வருடங்கள் செயற்பட்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினார். இலங்கை திரைப்படத் தணிக்கைக் குழுவிலும் அங்கத்தவராக இருந்து தனது பங்களிப்பை வழங்கினார். இந்த ஆர்வங்களின் காரணமாகத் தனது சுயசரிதையை எழுத முற்பட்டவர் தனது எழுத்துப்பணி முடியும் முன்பே இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கினார்.

அந்தக் காலத்தில் பொலிஸ் துறையில் சேர்வதற்கு பெரும்பாலும் பலரும் விருப்பம் காட்டாத போதிலும் இவர் பொலிஸ் துறையில் சேர விரும்பியது விசித்திரமானது. பொலிஸ் துறையில் விரும்பியபடியே இணைந்த அவர் விரும்பியபடியே பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியைப் பெற்றார்.



மன்னார், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் போர்க் காலங்களில் தனது பணியை செவ்வனே நிறைவேற்றினார். 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்த்தப்பட்டு, பொலிஸ் தலைமையகத்தில் சிவில் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். பல்வேறு காரணங்களால் இவர் பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவியுர்த்தப்படுவது தவிர்க்கப்பட்டது. இதற்கு நீதிமன்றத்தின் ஊடாகப் போராட்டத்தை மேற்கொண்ட அரசர், 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக பதவியுயர்வு பெற்றார். எனினும் மறுநாளே 37 வருட பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரியான இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகளில் டிப்ளோமாவையும், மனித உரிமைகளும் சமாதானக் கல்வியிலும் டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டார். பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களில் பல்வேறு விதமான பயிற்சிகளையும் பெற்றுக்கொண்ட அரசர் பல்வேறு சர்வேதேச மாநாடுகளில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவம் செய்தார். இவரின் இந்தச் சேவைகளைப் பாராட்டி பொலிஸ் தலைமை அலுவலகத்தால் சிறந்த பொலிஸ் அலுவருக்கான விருதினை நான்கு முறை பெற்றிருக்கிறார்.

அதேபோன்று சமூக சேவைகளிலும் ஆர்வம் உள்ள இவர் கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத்தில் இணைந்து பல்வேறு சமூக் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். குறிப்பாக அந்தக் கிளையின் தலைவராக கடமையாற்றிய காலப் பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். இதேவேளை சர்வதேச பொலிஸ் சங்கத்தின் இலங்கைப் பிரிவுக்கான நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும், ஆசியப் பிராந்திய குற்றத் தடுப்பு நிறுவனத்தின் இலங்கைப் பிரிவுக்கான நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும், ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகள் நிறுவனத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் கடமையாற்றி பல்வேறு பணிகளையும் முன்னெடுத்தார்.

சிறந்த கலை இலக்கிய ஆர்வலரான அரசர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருந்து அங்கு நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கியதுடன் புரவலராகவும் இருந்து பல நிகழ்ச்சிகள் நிறைவேறுவதற்கு உதவியாக இருந்துள்ளார். பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றிய காலத்தில் இன, மத, சாதி, மொழி, பிரதேச, பால் வேறுபாடுகள் எதனையும் பாராது உதவி என்று வந்த பலருக்கும் தன்னாலான உதவிகளைச் செய்துள்ளார். எவர் எந்த உதவிகளைக் கேட்டாலும் அவர்களுக்கு உதவி செய்கின்ற மனப்பான்மை அரசரிடம் இருந்தது. குறிப்பாக சிங்கள மொழி தெரியாத பலருக்கு அவர் ஓர் ஆபத்பாந்தவனாக இருந்துள்ளார். இன்னும் சொல்லப்போனால் அவர் ஓர் அரசனாகவே பொலிஸ் சேவையில் இருந்துள்ளார். அரசரின் சமூகம் சார்ந்த சேவையைப் பாராட்டி தற்காப்புக் கலைகளுக்கான சர்வதேசப் பல்கலைக் கழகம் 2003ஆம் ஆண்டு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியது. பிறருடைய பிரச்சினைகளை எல்லாம் தன்னுடைய பிரச்சினைகளாகச் சுமந்த அரசர் சுகவீனமுற்று இருந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் 29ஆம் திகதியன்று காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நின்றாடும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் திருவடிக் கமலங்களைச் சென்றடைந்தார். ■

# உளநலம் பாதிக்கப்பட்டோரின் வயிற்றிலும் அடியா?

"பாவியார் போகும் இடம் பள்ளமும் திட்டியுமாம்" என்பார்கள். தமிழர் தாயகத்தில் 30 வருடப்போர் தந்த வலி பல விதங்களில் உண்டு. போர் 2009ஆம் ஆண்டு முடிவுற்றாலும் போர்தந்த வலி தற்போதும் எமது சிலபல குடும்பங்களுக்கு உண்டு. உதாரணம் காணாமற் போனவர்கள், சிறையில் உள்ளவர்கள் கால், கை, கண் போன்ற அங்கங்களை இழந்தவர்கள், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு இன்றும் மூலையில் முடங்கிக் கிடக்கின்றனர்.

நானும் 2009ஆம் ஆண்டில் இடம்பெற்ற இறுதிப் போரில் பாதிக்கப்பட்டவன். 12 வருடங்களாக சிகிச்சை பெற்றும் வருகின்றேன். எனது குடும்பம் 5 பேர் கொண்டது. குடும்பத்தலைவன் பாதிக்கப்பட்டால் அந்தக் குடும்ப நிலையை சொல்லித்தான் புரிய வேண்டுமா?

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கிளினிக்குக்குச் சென்றபோது மருத்துவர் பார்வையிட்டு மருந்தகம் சென்றபோது எமக்குரிய மருந்துகள் தட்டுப்பாடாகி தனியார் பாமஸிக்கு எழுதித் தந்தார்கள். கடைக்காரரோ அந்த மருந்துகளுக்கு ஆயிரத்து 400 ரூபா தேவை என்றார். அட கடவுளே எங்கள் வயிற்றிலும் அடியா? என் போன்ற பலர் விலையைக் கேட்டுவிட்டு மருந்தே வாங்காது செல்வதைக் காணமுடிந்தது.

உளநலம் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் மூலையில் முடங்கிக் கிடக்கின்றனர். அரசு சிலருக்கு 5 ஆயிரம் ரூபாவை வழங்குவதை பாராட்டலாம். ஆனால் இன்றைய சூழலில் பொருள்கள் ஆனை விலை குதிரை விலைபோல் கூடுகிறது.

அந்தப் பணத்தை எடுத்து ஆயிரத்து 400 ரூபாவுக்கு மருந்து வாங்கினால் என்ன செய்ய முடியும்? எனவே உளநலம் பாதிக்கப்பட்டோர் விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தனியார் நிறுவனங்கள், கருணை உள்ளம் படைத்த வள்ளல்கள் எமக்கு உதவ முன்வர வேண்டும். நாமும் மனிதர்கள் தான் மனநோயாளிகள் அல்லர். சற்று சிந்தியுங்கள்.

ஆசிரியருக்கு கடிதம்

அன்பு, வரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுக

## வலியுறுத்துகின்றது சு.க.

**கொழும்பு, பெப். 7**

**உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பிலும், நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களுக்குத் தீர்வு காணவும் உடனடியாக சர்வகட்சி மாநாட்டை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டத்தில் 15 தீர்மானங்களை அகில இலங்கை செயற்குழு நிறைவேற்றியுள்ளது. மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்காக தாமதமின்றி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதும் அதில் ஒரு தீர்மானமாகும்.

அரசியல் பேதங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்துவிட்டு, சர்வக்கட்சி மாநாட்டை நடத்தி நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு நெருக்கடிகள் சம்பந்தமாக கலந்துரையாடி அவற்றை முகாமைத்துவம் செய்வது தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கொரோனாத் தொற்று காரணம் அல்ல. இதனால், பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக தீர்வுகாணவேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு.

சட்டத்தின் ஆளுமை தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கவும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கையின் மதிப்பை அதிகரிக்கவும் நாட்டின் பல பிரதேசங்களில் நடக்கும் ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுதந்திரக் கட்சி யோசனை முன்வைத்துள்ளது. (எ-இ)

# நாட்டிலுள்ள பிரச்சினைகள் ஜனாதிபதிக்கு புரியவில்லை

## டியூ.குணசேகர விமர்சனம்



கொழும்பு, பெப். 7

நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கோ, அமைச்சரவைக்கோ போதிய புரிதல் கிடையாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி கூட்டமொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுதந்திரத்தின் பின்னர் இந்த நாடு மிக மோசமான நெருக்கடியை தற்பொழுது எதிர்நோக்கியுள்ளது. இந்த நெருக்கடிகளுக்கு என்ன காரணம் என்பது தொடர்பாக ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ, அமைச்சரவைக்கோ, ரணில் விக்ரமசிங்கவுக்கோ, சஜித் பிரேமதாஸவுக்கோ அல்லது ஜே.வி.பிக்கோ தெரியவில்லை.

திறைசேரியில் பணம் இல்லாத பிரச்சினைக்குப் பணத்தை அச்சிடுவது ஒரு தீர்வாக அமையாது. அரசியல் செய்யாத ஒருவர் நன்றாக ஆட்சி செய்வார் என நான் தனிப்பட்ட ரீதியில் இந்த ஜனாதிபதி மீது அபிப்பிராயம் கொண்டிருந்தேன்.

அரசியல் செய்யாத ஒருவரால் ஆட்சி செய்ய முடியாது. கட்டளை இட்டு இராணுவ வழிமுறைகளில் ஆட்சி செய்யவே முடியாது. கொள்கை நடைமுறையில் பெரியவில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. வரி வருமானத்தின் ஊடாக திறைசேரிக்கு பணம் வருவதை உறுதி செய்யவேண்டும்- என்றார். (எ-இ)

# கோத்தாபய அரசாங்கத்தில் கூட்டுப் பொறுப்பு இல்லை!

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப்.7

தற்போதைய அரசாங்கத்துக்குக் கூட்டுப்பொறுப்பு என்பது கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எரிசக்தி அமைச்சரால் எரிபொருள் விநியோகம் செய்ய முடியவில்லை, அவர் மின்வலு அமைச்சரை குறை சொல்கின்றார். மின்வலு அமைச்சரால் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க முடியவில்லை, அவர் எரிசக்தி அமைச்சரை குற்றஞ்சுமத்துகின்றார்.

ஆனால் இந்த இருவரினாலும் தங்களது பணிகளை சரியாகசெய்து கொள்ள முடியவில்லை. தற்போதைய அரசுக்கு கூட்டுப் பொறுப்பு கிடையாது- என்றார். (எ-இ)



# ஆஸியிடமும் கடன்!

கொழும்பு, பெப். 7

இலங்கை, அவுஸ்திரேலியாவிடம் 200 மில்லியன் டொலர் கடன் வசதியைக் கோரியுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இந்தக் கடனைப் பயன்படுத்தி பிரதானமாக பருப்பு மற்றும் பார்லி ஆகியவற்றை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மீதமுள்ள பணத்தில் ஏனைய அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் இருந்தே பருப்பு மற்றும் பார்லி இறக்குமதி செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் புத்தாண்டு காலம் மற்றும் அடுத்து வரும் மாதங்களுக்கு நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து கடன் உதவி கிடைக்க உள்ளது. இந்தத் தொகையானது அடுத்த ஆறு மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய போதுமானதாக இருக்கும். இதுதவிர சீனாவிடம் 10 லட்சம் மெற்றிக்தொன் அரிசியை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

# சங்காபிஷேகம்

கொடிகாமம், பெப்.7

கொடிகாமம் சந்தை வாயில் பதியுறை காளிகாதேவி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை 108 சங்காபிஷேகமும் 108 ஹோமத் திரவியங்களாலான விசேட யாகமும் இடம்பெற்று அன்னதானமும் இடம்பெறவுள்ளது. (வ-159)

# அனுமதியின்றி குடியிருந்த எம்.பிக்களுக்குத் தண்டம்!

கொழும்பு, பெப். 7

கடந்த பொதுத்தேர்தலில்தோல்வியடைந்த பின்னரும் கொழும்பு மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பில் வசித்துவந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தோல்வியடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குடியிருப்பில் தங்கியிருக்க வழங்கப்பட்ட கால அவகாசத்தையும் தாண்டி அவர்கள் அங்கு வசித்து வந்துள்ளனர். இதற்கான தண்டத்தைச் செலுத்த தவறிய குற்றத்துக்காக அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி ஒருநாள் குடியிருப்பில் தங்கினால், 500 ரூபா தண்டம் விதிக்கப்படும். இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் [illegible] 10 லட்சம் ரூபாவை தண்டமாகச் செலுத்த வேண்டியுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம)

# ராகம தாக்குதல் சம்பவத்தால் இன்னொருவருக்கும் ஆபத்து!

கொழும்பு, பெப்.7

ராகம மருத்துவக் கல்லூரியில் இடம்பெற்ற சித்திரவதை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மூன்று சிரேஷ்ட அமைச்சரவை அமைச்சர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலுக்கு வாகனங்களை வழங்கினார் என்று கூறப்படும் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் கீர்த்தி வீரசிங்கவை பதவி நீக்கம் செய்யவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ராகம மருத்துவக் கல்லூரி மாணவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மகன் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் தாக்குதல் நடத்தச் செல்வதற்கு தென்னை அபிவிருத்தி அதிகார சபை வாகனங்களைப் பயன்படுத்தினார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து அருந்திக பெர்னாண்டோ இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து விலகியுள்ளார். இந்த தாக்குதல் தொடர்பான வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 இல் 'வலிமை'


சென்னை, ஜன.7
நடிகர் அஜித்குமார் நடிப்பில் உருவாகியுள்ள 'வலிமை' திரைப்படம் எதிர்வரும் 24 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

நடிகர் அஜித்குமார் நடிப்பில் இயக்குநர் எச்.வினோத் இயக்கியுள்ள திரைப்படம் 'வலிமை'. இந்த திரைப் படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

'வலிமை' திரைப்படம் பொங்கலுக்கு வெளியாகும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் கொரோனா காரணமாக பிற்போடப் பட்டது. இந்த நிலையில் 'வலிமை' திரைப் படம்எதிர்வரும் 24ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. (ச-இ)





## 216 அடி உயரமான ராமானுஜர் சிலை மோடியால் திறப்பு

புதுடில்லி, பெப். 7
ஹைதராபாத், முச்சிந்தலாவிலுள்ள 216 அடி உயரமான ராமானுஜர் சிலையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.

ஆயிரம் கோடி ரூபா செலவில் மிகப் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள இந்தச் சிலை தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை மற்றும் துத்தநாகம் என ஐந்து விதமான உலோகங்களின் கலவையான 'பஞ்சலோக' சிலையாக நிறுவப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் அமைந்துள்ள 302அடி உயரம் கொண்ட புத்தர் சிலையே உலகின் மிகப்பெரிய சிலையாக இருந்து வருகின்றது. அதற்கடுத்ததாக, உலகின் இரண்டாவது பெரிய சிலை என்ற பெருமையை ராமானுஜரின் 216 அடி உயர சிலை பெறவுள்ளது. ராமானுஜரின் ஆயிரமாவது பிறந்த நாளைக் கொண்டாடும் முகமாக கடந்த 2014ஆம் ஆண்டு இந்தச் சிலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பழம்பெரும் திரைப்படப் பாடகி லதா மங்கேஷ்கர் காலமானார்

சென்னை, பெப்.7
பழம்பெரும் திரைப்படப் பாடகி லதா மங்கேஷ்கர் நேற்றுக் காலமானார்.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட லதா மங்கேஷ்கர் கடந்த ஜனவரி மும்பையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.



தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவரின் உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டு, நேற்று ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

லதா மங்கேஷ்கர் 13 வயதில் பாடல்கள் பாடத் தொடங்கினார். 1942ஆம் ஆண்டில் முதல் பாடலைப் பதிவு செய்தார்.

பல்வேறு மொழிகளில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். தமிழில் வளையோசை உள்ளிட்ட பல பாடல்களைப் பாடியுள்ளார்.

1969ஆம் ஆண்டில் பத்ம பூஷண், 1999 ஆம் ஆண்டில் பத்ம விபூஷண், 2001 ஆம் ஆண்டில் பாரத் ரத்னா விருதுகளைப் பெற்றுள்ளார். திரைத்துறையின் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருதையும் இவர் பெற்றுள்ளார்.


### இரு நாள்கள் துக்கதினம்

பிரபல பின்னணி பாடகி லதா மங்கேஷ்கர் மறைவுக்கு இந்தியா முழுவதும் இரு நாள்கள் தேசிய துக்க தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது என மத்திய அரசு அறிவித்துள்ளது.

மேலும் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் நாடு முழுவதும் பறக்கவிடப்படவுள்ளது.

இவரது மறைவுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் மற்றும் சினிமா பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் லதா மங்கேஷ்கர் உடலுக்கு முழு அரசு மரியாதையுடன் நேற்றுமாலை இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-இ)



## 18 ஆண்டுகளுக்குப் பிறகு பேஸ்புக் நிறுவனம் சரிவு

உலகின் முன்னணி வலைத் தளமான பேஸ்புக்கின் தினசரி பயனர்களின் எண்ணிக்கை 18 ஆண்டுகளில் இல்லாத அளவு இந்த ஆண்டு குறைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டா கூறுகையில்,

பேஸ்புக்கின் தினசரி பயனர்களின் எண்ணிக்கை கடந்த 3 மாதங்களில் 193 கோடியில் இருந்து 192.9 கோடியாக குறைந்துள்ளது. இதற்கு டிக்டாக், யூடியூப் போன்ற சமூக வலைதளங்களுடனான போட்டியே காரணம்.

மேலும் விளம்பரதாரர்களும் பேஸ்புக்கில் விளம்பரம் செய்வதற்காக செலவிடும் தொகையை குறைத்துள்ளனர்.

தற்போது மார்க் ஜுக்கர்பெர்க் மெய்நிகர் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்தி வருவதால் மெட்டா நிறுவனம் பிற சமூக வலைத்தளங்களுடனான போட்டியைக் குறைத்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. (ச-இ)

## அமெரிக்காவில் காந்தி சிலை உடைப்பு



நியூயோர்க், பெப்.7
அமெரிக்கா, நியூயோர்க் நகரிலுள்ள மகாத்மா காந்தியின் வெண்கலச் சிலை ஒன்று உடைக்கப்பட்டுள்ள சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் மன்ஹாட்டனுக்கு அருகில் உள்ள யூனியன் சதுக்கத்தில் மகாத்மா காந்தியின் 8 அடி உயரச் சிலை அமைந்துள்ளது. இந்த சிலையை மர்மநபர்கள் உடைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இழிவான செயலுக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் இந்தியத் தூதரகம் சார்பில் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

## இன்றைய நாள் ராசிபலன்

**மேடம்:** பயணம் செல்லும்போது பொருள்கள் பற்றிய கவனம் தேவை. சமூகத்தில் பெருமிதம் அடையும்படியான செயல் ஒன்றை செய்வீர்கள். பெரியோரிடம் பணிந்து நடந்து அவர்களது ஆசியைப் பெறுவீர்கள்.

**இடபம்:** வீட்டில் குதூகலமான சூழல் நிலவும். சிறு பயணம் உண்டு. பணியாளர்கள் கூடுதலாக உழைத்து நற்பெயர் பெறுவார்கள். அரசாங்கத்தின் மூலம் எதிர்பார்த்த நன்மை உண்டு.

**மிதுனம்:** பொறுப்புகள் கூடும். நல்ல செய்தி வரும். பயம் தீரும். நண்பர்கள் இடையே ஏற்பட்ட சண்டை, சச்சரவுகள் அகலும். உங்களுக்கு ஆதரவு அளிப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும்

**கடகம்:** புதிய வழிமுறைகளை கையாண்டு வெற்றி பெறுவீர்கள். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் வெற்றிகாண்பீர்கள். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். அரசின் உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** பேச்சில் கவனமாக இருந்தால் பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம். பழி தரக்கூடிய செயல்களைச் செய்ய வேண்டாம். மனவலுகூடும். புதிய முதலீடுகளை ஆராய்ந்து செய்து வெற்றி அடைவீர்கள்.

**கன்னி:** பணி சம்பந்தமாக வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பொருளாதாரம் முன்னை விட சிறப்பாக இருக்கும். [illegible] வீர்கள்.

**துலாம்:** பணியாளர்களுக்கு இன்று மகிழ்ச்சிகரமான செய்திவரும். குடும்பத்தில் ஒருவருக்கு தடைப்பட்டு வந்த நன்மைகள் இன்று நடைபெறும். உங்களின் உடல்நலம் கடந்த நாள்களை விடவும் மேம்படும்.

**விருச்சிகம்:** பொறுப்பினை நன்கு நிறைவேற்றி பாராட்டு பெறுவீர்கள். கடந்த சில நாளாக இருந்து வந்த பிரச்சினை ஒன்று தீரும். ஆழ்ந்து யோசித்து திட்டமிட்ட பிறகு புதிய செயலில் இறங்குங்கள்.


**தனுசு:** உங்களின் சமீபத்திய தவறால் ஏற்பட்டிருந்த தொல்லை நீங்கும். மன உளைச்சல் நீங்கும். நட்பு வட்டம் விரிவடையும். சிறு பயணத்தால் கடந்த கால பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும்.

**மகரம்:** வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. எதிரிகளால் ஏற்பட்ட பிரச்சினை நீங்கும். சேமிப்பில் ஆர்வம் கூடும். நீண்ட கால பிரச்சினை ஒன்று தீரும். பேச்சால் நன்மை வரும்.

**கும்பம்:** மற்றவர்களுக்கு நன்மை செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பச் சூழலில் சுமுகமான போக்கு இருக்கும். குழந்தைகளால் பெருமை வரும். அக்கம்பக்கத்தினர் பகையை மறந்து கலகலப்பாகப் பழகுவார்கள்.

**மீனம்:** பணியாளர்களில் சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். இன்று ஏற்படும் செலவுகள் நன்மையும், மகிழ்ச்சியும் தரும். புதிய விடயம் ஒன்றைக் கற்பீர்கள். கலகலப்பான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா. நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதற்கான நிதியுதவியை ரட்ணம் அறக்கட்டளை வழங்கியது. (ய-ரி1)



ஹற்றனில் கவிஞர் கிருஸ்ணப்பிரியனின் 'மூதன்னையின் பாடல்' கவிதைத் தொகுப்பு வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ய)



இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத்தொண்டர் சபையின் ஏற்பாட்டில், பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் ஞானலிங்கேஸ்வரர் முன்றலில், கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொங்கல் விழா இடம்பெற்றது. விழாவில், மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை சிறந்த முறையில் திட்டமிட்டு செயற்படுத்தியும் ஆசிரியர்களை நெறிப்படுத்தியும் சேவையாற்றி வரும் அதிபரும் பாடசாலையின் இலங்கை முதல் உதவிச்சங்கத் தலைவருமான க.தெய்வராசா கௌரவிக்கப்பட்டார். (ம-ரி1,159)




கிளிநொச்சி மாவட்ட அனைத்து பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், குருதிக்கொடை முகாம் அண்மையில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட அனைத்து பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் குமார் பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற முகாமில், பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். (ம-ரி1,113)



சமுர்த்தியின் வலுப்படுத்தல் திட்டத்தினூடாக, சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக சமுர்த்திப் பயனாளிகள் 10ෆ பேருக்கு உபகரணங்கள் கரைச்சி பிரதேச செயலகத்தில் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-ரி1,113)



கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கு ஒலிபெருக்கி மற்றும் கிரிக்கெட் துடுப்பு மட்டைகள் ஆகியன கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன. சண் வெதுப்பக உரிமையாளர் சுரேஸின் நன்கொடையில் குறித்த உதவிகள் வழங்கப்பட்டன. (ய-159)



இராஜேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் லயன் கலாநிதி செல்லத்துரை திருமாறனின் பிறந்த நாளை முன்னிட்டு குட்டியபுலம் அரசினர் தமிழ் கலைவன் பாடசாலையில் கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. (ய-9)



பூமணி அம்மா அறக்கட்டளையின் வாழ்வாதார நிவாரண உதவிப் பணியாக, யாழ். நல்லூர் பிரதேச செயலக கிராம அலுவலர் பிரிவில் பொருளாதாரத்தில் நலிவுற்ற முதியோர் 25 பேருக்கு உலர் உணவு நிவாரண பொருள்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (ய-50)



இராஜேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் லயன் கலாநிதி செல்லத்துரை திருமாறன் தனது பிறந்த நாளையொட்டி வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அதிபரிடம் ஒரு தொகுதி உள்ளக விளையாட்டு உபகரணங்கள் கடந்த இரண்டாம் திகதி கையளிக்கப்பட்டன. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 03.02.2021 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பகுலவிளக்கு

## அமரர் சுப்பிரமணியம் பிள்ளையம்மா

அன்பின் அம்மாவே
பாசத்தின் பாசறையே
நேசத்தின் நிறைவிடமே
காத்தலின் காப்பிடமே
ஆண்டுகள் பல கடந்தாலும்
நிலைக்கும் உங்கள் நினைவுகள்

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வு இன்று (07.02.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*

குடும்பத்தினர்

**சந்திமுருகன் வேக்சொப் அன் சேவிஸ்**

இல.100, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

077 711 0119, 077 201 8275

மலர்வு 14.08.1946 உதிர்வு 03.02.2021

(cs 42747) (2.6)

# மரண அறிவித்தல்

## திரு. நல்லையா திருவருட்செல்வம் (அப்பன்)



புளியங்கூடலை பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தினை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா திருவருட்செல்வம் (அப்பன்) அவர்கள் கடந்த (04.02.2022) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா, வரதேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயந்தி அவர்களின் அன்புக் கணவரும், பிரசாம் அவர்களின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பரம்சோதி, இராஜேஸ்வரி, சிவசோதி, ஆனந்தசோதி காலஞ்சென்ற அருட்சோதி மற்றும் ஞான பண்டிதசோதி, ஈஸ்வரகௌரி, சிவகாம ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நல்லசேகரம் மற்றும் இந்திராதேவி, தெய்வேந்திரம், மனோராணி, காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் மங்களநாயகி, ரஜனி, சுயேந்தி, சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தில்லைநாதன், சிவகுமார், கேதீஸ்வரன் (சேந்தன்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2022) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

118, அ[illegible]யபாதம் வீதி,
கொக்குவில்.
076 9760 160

தகவல்:
குடும்பத்தினர்

(CS 178396)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளிஅம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்து நாள்கள் உற்சவம் இடம்பெறும். (ஒ-5)


## லொறி விற்பனைக்கு

28 ஸ்ரீ 2977 என்னும் வாகன இலக்கமுடைய நல்லநிலையில் உள்ள லொறி விற்பனைக்கு.

077 102 3824, 075 785 3425

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மேசன், கூலியாட்கள் (ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வோர் விரும்பத்தக்கது) மற்றும் தொழில்நுட்ப உத்தி யோகத்தர் (T.O) தேவை.

தொடர்புக்கு: 077 944 8109, 076 7600 403

e-mail: jenoshanark@gmail.com


## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ-து) வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர் அட்டவணை காட்சிப்படுத்தல்

சங்க கிளை ரீதியாக வாக்களிக்க தகைமையுடைய வாக்காளர் பட்டியல் 31.12.2021 உடன் முடிவுறுத்தப்பட்டு கிளைகளில் 03.02.2022ம் திகதி தொடக்கம் 20.02.2022ம் திகதி வரையான காலப்பகுதிவரை காட்சிப்படுத்தப்படுகின்றது. இந்த வாக்காளர் பட்டியலில் தகுதியிருந்தும் தமது பெயர் முகவரி இடம்பெறாது இருந்தாலோ அல்லது ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் 21.02.2022ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் "செயலாளர், பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், கண்டிவீதி, சாவகச்சேரி" என முகவரியிட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கத்தின் இயங்கும் கிளை நிலையங்களில் அந்தந்த கிளைக்கான வாக்காளர் பட்டியலும், இயங்காது உள்ள கிளை நிலையங்களின் வாக்காளர் பட்டியல் பின்வரும் இடங்களிலும் சங்க தலைமை அலுவலகத்திலும் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

| கிளை இலக்கம் | கிளையின் பெயர் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 1 | தென்மராட்சி | கிராமசேவையாளர் அலுவலகம் J/300 சாவகச்சேரி நகரம் |
| 2 | சாவகச்சேரி தெற்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/306 நுணாவில் கிழக்கு |
| 3 | நுணாவில் கிழக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/307 நுணாவில் மத்தி |
| 4 | நுணாவில் ஜோதி | கிராமசேவையாளர் அலுவலகம் J/308 நுணாவில் மேற்கு |
| 6 | மீசாலை கிழக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/318 மீசாலை கிழக்கு |
| 7 | வேரக்கேணி | கிராமசேவையாளர் அலுவலகம் J/312 மட்டுவில் மத்தி |
| 8 | மலர்மகள் | உபதபாலகம் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி |
| 10 | மட்டுவில் வடக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/313 மட்டுவில் வடக்கு |
| 12 | சரசாலை தெற்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/316 சரசாலை தெற்கு |
| 16 | சாவகச்சேரி வடக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/304 மண்டுவில் |
| 17 | வேம்பிராய் | கிராமசேவையாளர் அலுவலகம் J/321 மீசாலை வடக்கு |
| 18 | மீசாலை வடக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/321 மீசாலை வடக்கு |
| 20 | சாவகச்சேரி வடகிழக்கு | சித்திரவேலாயுதர் சனசமூக நிலையம் மீசாலை கிழக்கு |

இக்காலப்பகுதிக்குள் ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெறாதவிடத்து காட்சிப்படுத்தப்பட்ட பட்டியல் அடிப்படையில் கிளைக்குழுத் தெரிவுகள் நடாத்தப்படும்.

தலைவர் (CR 37513) (3/6) செயலாளர்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
20 . 06 . 1957



ஆண்டவன் அடியில்
20 . 01 . 2021

### தம்பிஐயா மோகனதாஸ் (அப்பு)

(புங்குடுதீவு)

"ஆண்டு ஒன்று ஆனதப்பா
அவனி விட்டு நீங்கள் சென்று
ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும்
அப்பா உங்கள் போல் வந்திடுமா?
அசையாது நாம் இருக்க எமை
அரவணைத்து வளர்த்தீர்கள்
அடுத்த இடம் தெரியாத அம்மாவும்
நாங்களும் திக்கு தெரியாமல்
சிந்தை குலைந்து விட்டோம்
ஆறுதல் தந்து எமை ஆசீர்வதித்திடுங்கள்
எம் அன்பு அப்பாவே!
உங்கள் ஆத்மா மனோன்மணி அம்மனின்
பாதக் கமலத்தில் சுகம்பெற வேண்டுகின்றோம்
அனு தினமும்"

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சாயி போட்டோ
நாச்சிமார் கோவிலடி,
1020, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (cs 418665) (2.6)

குடும்பத்தினர்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.06.1952

மறைவு
12.02.2019

### அமரர் தம்பித்துரை பாலகிருஷ்ணன்

(இளைப்பாறிய ஆசிரியர் வணிகக்கல்வி – சாவகச்சேரி இந்துக்கல்லூரி
சமாதான நீதவான் )

திதி : ரத சப்தமி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
மூன்றாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு
20.11.1941

இறப்பு
08.01.2022

### அமரர் நாகலிங்கம் ஜெயனொளிபவன்

(முன்னாள் அதிபர் கொக்குவில் CCTMS, முன்னாள் ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி)

எமது அன்பு அப்பா நோயுற்றிருந்த வேளையில் அவருக்கு ஆதரவாக இருந்த அனைவருக்கும், வைத்தியசாலையில் வந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது முதற்கண் நன்றிகள். அப்பாவின் மறைவை கேள்வியுற்று நேரிலும் தொலைபேசி ஊடாகவும், சமூகவலைத்தளங்கள் ஊடாகவும் எம் சோகத்தில் பங்கேற்றவர்களுக்கு எம் நன்றிகள். அப்பாவின் இறுதிச்சடங்கில் நேரடியாகவும், வலைத்தளமூடாகவும் பங்கேற்றவர்களுக்கும் எம் அப்பாவின் பூதவுடலை பார்வையிட உடனோடி வந்தவர்களுக்கும், மலர் வளையங்களும் பூமாலைகளும் அனுப்பிய அன்புள்ளங்களுக்கும், பத்திரிகைகளிலும் சமூகவலைத்தளங்களிலும் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் இறுதிச் செய்தியை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். எமக்கு உணவளித்த அன்புள்ளங்களுக்கும் நன்றிகள்.

31ஆம் நாள் நினைவஞ்சலி நாளை (08.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கொட்டாஞ்சேனை வீதியில் அமைந்துள்ள ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறும் இரங்கலுரையிலும், மலர் அஞ்சலியிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

077 293 6498

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் படகில் திருட்டு சந்தேகத்தில் 4பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 7
மயிலிட்டிதுறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த உடைமைகளை திருட முற்பட்ட குற்றச்சாட்டில் பலாலி- அந்தனிபுரத்தைச் சேர்ந்த 4பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய இழுவைப் படகுகள் மயிலிட்டித்துறை முகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் படகுகளுக்குள் அத்துமீறி நுழைந்து, எண்ணெய் பரல்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை திருட முற்பட்டதாக குற்றஞ்சுமத்தி 4பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ.23)

## மாணவர்களிடையே மோதல்; 2 பேர் மருத்துவமனையில்

4 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 7
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாசியப்பிட்டியில் தனியார் கல்வி நிறுவன மாணவர்களுக்கு இடையிலான மோதலில் இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 4 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-
தனியார் கல்வி நிறுவனத்தின் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கும், அந்த நிறுவனத்தில் 10ஆம் வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கும் இடையிலான வாக்குவாதம் மோதலாக மாறியது. இதனால் 10ஆம் வகுப்பு மாணவர்கள் இருவர் காயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் உயர்தர வகுப்பு மாணவர்கள் 4பேரைக் கைது செய்துள்ளோம்- என்றனர் பொலிஸார். (ஒ.125)


## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 12 . 1956

மறைவு 03 . 02 . 2022



### துரைரத்தினம் கதிர்காமலிங்கம்

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் கதிர்காமலிங்கம் அவர்கள் கடந்த (03.02.2022) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லம் தம்பதியர் வசாவிளான் தெற்கு சங்கரப்பிள்ளை செல்லமுத்து தம்பதியினரின் பேரனும், காலஞ்சென்ற துரைரத்தினம் மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற கதிரித்தம்பி மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், பவானிதிசியின் அன்புக் கணவரும் ஆரபியின் அன்புத் தந்தையும், ரவீந்திரன், முருகானந்தம், நந்தினி, இளமுருகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், விக்கினேஸ்வரன், சர்வேஸ்வரி ஸ்ரீகுமாரி குகநேசன் திருவருட்செல்வன் காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் மைதினி ஸ்ரீகாயத்திரி பத்மநாதன் நளாயினி ஆகியோரின் மைத்துனரும், ராஜமணி உமா ஜெயதேவி ஆகியோரின் சகலனும் கோபிநாத் ரிஷிகேஷன் நிருத்திகா தர்ஷிகா ஸ்ரீலவன் தரணிகா மோகன்ராம் மோகனாங்கி ஆகியோரின் மாமனாரும், அருண் ஆரூரன், அபர்னா, ஹரன், நாகநர்த்தனன், தர்ஷனா, நாககீர்த்தனன் ஆகியோரின் பெரியதந்தையாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் 10.02.2022 (வியாழக்கிழமை) ஜேர்மனி நேரம் 10.00 மணிக்கு நடைபெறும்.
**குறிப்பு:-** இறுதிக்கிரியைகள் நடைபெறும் அதே நேரத்தில் (இலங்கை நேரம் மாலை 2.30) கிளானை, கொல்லங்கலட்டியில் உள்ள அவர் பிறந்த இல்லத்தில் (அன்பகம்) இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல:
பவானிதிசி - 00491634276506
ஆரபி - 004915752996014
ரவீந்திரன் - 004915210107531

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18670) 1/6



## மரண அறிவித்தல்



### கந்தசாமி அன்னலட்சுமி

யாழ். சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி மேற்கு காளிகோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி அன்னலட்சுமி அவர்கள் 05.02.2022 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னு தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான வீரர், தட்சணாமூர்த்தி, அன்னம்மா மற்றும் தர்மகுலசிங்கம், குமாரகுலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கருணாநிதி, பரமநாதன், இந்திராணி மற்றும் அரியமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சௌந்தரராஜன், தனலட்சுமி, தர்மராஜா, காலஞ்சென்ற சரஸ்வதி, பார்வதி, மோகனராஜா, சிவகுமார், கிருஸ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாவதி, காலஞ்சென்ற தேவராசா, அனுசியாவதி, தேவராசன், பிரியதர்சினி, லோகமதி, பிருந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், சத்தியதாசன், ஜெயரஞ்சனி, பாலறஞ்சினி, ஜெயதாசன், காலஞ்சென்ற நிமலதாசன், பிரதீபரஞ்சனி, சிவரஞ்சனி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், மதியழகன், பார்த்தீபன், மதுரா, மயூரா, பகீரா, சாரங்கன் ஆகியோரின் அன்பு அத்தையும்,வரதலட்சுமி, நாகரத்தினம், பத்மலோஜினி, தனபாலசிங்கம், புவனேஸ்வரி, நற்குணராசா, பிரகலாதன், சசிகலா, சுபாநந்தி, சண்முகநாதன், கமலினி, ரகுராம், லேனிகா, ஜீன்மரீ ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவன், பிரியங்கா, பிரகாஸ்- சங்கீதா, ஜெனுஜன், ஜெனுஜா, பார்த்தீபா- ஆரூரன், மோகனலாவன்ஜா, கௌசிகா, தனோஜன், சுகன்ஜா, கீர்த்தனன், அஸ்வினி, கிருஷானி, சுபீக்ஷா, தியான், பிரணவன், பிரவீன், பிரதுஷ்சன், டினோஜன், அனோஜன், லக்சிகா- விதுசன், வினோஜிகா, ஜெனுசன், ஜெசிந்தன், சஞ்சய், துளசிகன், சந்தோஷ், நிலேஸ், நிருசன், நிருசிகா, அரிஸ், ஜெனிஸிகா, ஜனனி, சரன், நிகில்ராம், சகில்ராம், கியா, சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திவ்யலட்சுமி அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (08.02.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் திருநெல்வேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகள் பார்வதி : 077 4634 335
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



### நடராசா நல்லதம்பி

நல்லூர் வடக்கு, பண்டாரக்குளம் மேற்கு வீதியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கு, அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நடராசா நல்லதம்பி அவர்கள் (05.02.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் மருமகனும், திருமதி நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோதினி, கலியுகன், ராஜினி, ஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார், சுகந்தி, அரவிந்தன், சுஜீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷனா, றுஷானா, கமல்ராஜ், பிரியந்தன், லக்ஷானா, மிதுன், தக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும், புவனேஸ்வரி, சுந்தரலிங்கம், சிவபாக்கியம், கனகாம்பிகை (சறோ), ஜெயவீரசிங்கம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தருமராஜா மற்றும் சுப்பிரமணியம், இராமநாதன், செல்வராணி, இராசமணி காலஞ்சென்றவர்களான கமலாதேவி, தியாகேஸ்வரி, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், தம்பித்துரை, கலைஞானசிங்கம் மற்றும் ஜெயதேவி ஆகியோரின் சகலனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 1.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி வீதி (கேணியடி),
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி நல்லதம்பி நாகேஸ்வரி
077 895 7524

(CS 18670) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சர்வதேச...

'இறுதிக்கட்டப் போரின்போது கறுப்புப் பணத்தை பயன்படுத்தி வடகொரியாவிடம் ஆயுதங்கள் வாங்கியதாக நீங்கள் தெரிவித்த கருத்தை போர்க்குற்ற ஒப்புதல் வாக்குமூலமாகக் கருதி சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழர் தரப்புக்கள் வலியுறுத்துகின்றன. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?' என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவிடம், சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பஸில் ராஜபக்ச, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் உச்சம் பெற்ற காலப்பகுதியில் கறுப்புச் சந்தையில் கிடைத்த பணத்தைப் பயன்படுத்தியே இலங்கை வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை வாங்கியது என்ற கருத்தை நான் ஒருபோதும் மீளப்பெறப்போவதில்லை. அன்று நடந்த உண்மையைத்தான் இன்று கூறினேன். அது சட்டவிரோத நடவடிக்கை அல்ல. அதை எம்மால் எந்தச் சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்த முடியும்.

எனினும், இந்தக் கருத்தை ஊடகங்கள் என்னிடம் திரும்பத் திரும்பக் கிளறுவதை நான் விரும்பவில்லை. சர்வதேசப் பிரச்சினையை எழுப்ப நான் விரும்பவில்லை. எனது கருத்தைத் தமிழ்த் தரப்பினர் அல்லது புலம்பெயர் தரப்பினர் சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்த முடியாது.

ஏனெனில், பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கவே அன்று ஆயுதங்களைக் கொள்வனவு செய்தோம். மாறாக நாம் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் செய்ய ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவில்லை- என்றார். (அ-ஓ.5.22)

### கர்ப்பிணிக்கு...

றான முடிவு எடுத்து உயிரை மாய்க்க முற்பட்ட நிலையில் , காயங்களுடன் காப்பாற்றப்பட்டு, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக தனக்குத் தானே தீமூட்டி தவறான முடிவு எடுக்க முயன்றதாக தமது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஓ.23)

### சதொசவிடமிருந்து...

அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் பொதியில், 5 கிலோகிராம் நாட்டரிசி, 400 கிராம் நூடில்ஸ், 100 கிராம் நெத்தலிக் கருவாடு, 100 கிராம் தேயிலை மற்றும் 100 கிராம் மஞ்சள் தூள் உள்ளடங்குவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சதொச விற்பனை நிலையம் இல்லாத பிரதேசங்களிலுள்ள மக்கள் 1998 என்ற துரித இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம், 48 மணிநேரத்தில் வீட்டுக்கே இந்த நிவாரணப் பொதிகளை தருவிக்க முடியும்.

இதற்கான விநியோகக் கட்டணமாக 200 ரூபா மேலதிகமாக அறவிடப்படும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார். (அ-ஓ.இ)

### மீண்டும்...

ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை ரூ.177 இலிருந்து ரூ.184 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை ரூ.121 இலிருந்து ரூ.124 ஆக அதிகரித்துள்ளது. (ஓ-இ)

### மின்துண்டிப்பு...

படவுள்ளது என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மின்னுற்பத்திக்கும், தேசிய மின்விநியோகத்துக்கும் இடையில் 300 மெகாவாட்ஸ் இடைவெளி காணப்படுகிறது.

இந்நிலைமையை சீர்செய்ய மின்சக்தி அமைச்சு உரிய நடவடிக்கையை இதுவரையில் மேற்கொள்ளவில்லை என வலுசக்தி துறை அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. மின்னுற்பத்திக்கு தேவையான எரிபொருளை இன்றுவரை தொடர்ச்சியாக விநியோகிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்தது.

வலுசக்தி அமைச்சின் கடமைகளுக்கு எரிபொருளை கொள்வனவு செய்வதில் மீண்டும் சிக்கல் நிலைமை தோற்றம் பெற்றுள்ளதாக வலுசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த காலத்தை காட்டிலும் தற்போது மின்பாவனைக்கான கேள்வி அதிகரித்துள்ளது. 2 ஆயிரத்து 750 மெகாவாட் மின்பாவனைக்கான கேள்வி அதிகரிக்கப்படுமாயின் மின்விநியோகத்தை துண்டிக்க நேரிடும். இவ்விடயம் குறித்து மின்சார சபையின் உறுப்பினர்களுடன் இன்று பேச்சு இடம்பெறவுள்ளது- என்றார். (ஓ-இ)

### மின்தடையின்...

பின்னணியில் பெரும் சதி உள்ளது. நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் விளையாடவேண்டாம் என்று தொழிற்சங்கங்களை எச்சரிக்கின்றோம். மின்சாரத்தை துண்டித்து அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயலவேண்டாம் - இவ்வாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எரிவாயு அடுப்பு வெடிப்புப் பிரச்சினையின் பின்னால் யாரோ இருப்பதாகச் சொன்னேன். என்னை விமர்சித்தார்கள். இப்போது எரிவாயு அடுப்பு வெடிப்பதை பார்க்கின்றீர்களா? இல்லையே. அதேபோன்றுதான் இப்போது மின்சாரத் துண்டிப்பின் பின்னாலும் சதி இருக்கின்றது.

ஜனாதிபதியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த இடமளிக்காத ஒரு தரப்பு இதனைச் செய்கின்றது. எரிவாயு அடுப்பு வெடிப்பு விவகாரத்தின் உண்மை வெளியில் வந்ததைப்போன்று இந்த விடயமும் எதிர்காலத்தில் வெளிச்சத்துக்கு வரும். பொலிஸார் இது தொடர்பில் ஆர்ப்பாட்டமில்லாமல் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். அது முடிவடைந்ததும் சகல விடயங்களையும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவோம்-என்றார். (அ-ஓ.5)

### வெளிவிவகார...

சிரியர் ஜி.எல்.பீரிஸுக்கும், அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை நடைபெறவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று மதியம் புதுடில்லியைச் சென்றடைந்தார். அவரை இந்திய அதிகாரிகள் வரவேற்றனர்.

நாளை செவ்வாய்க்கிழமை வரையில் புதுடில்லியில் தங்கியிருக்கும் பீரிஸ், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் சந்திப்பார் என்று கூறப்படுகின்றது. (ஓ-இ)

### தமிழக...

துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திருவிழாவில் கலந்து கொள்ளும் இலங்கை - இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு இடையில் எதிர்காலத்துக்கான ஆரோக்கியமான சூழலை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலை நடத்தும் யோசனையும் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சதீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்து பக்தர்கள் கலந்துகொள்வதற்கு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அனுமதி வழங்குவதில்லை என்று யாழ். மாவட்டச் செயலக ஏற்பாட்டுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆலோசனையின்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் உரையாடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் அமைச்சின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-ஓ.5)

### ஆறு வயதுச்...

பேர் படுகாயமடைந்த நிலையில், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பேசாலை நடுக்குடா பகுதியிலிருந்து முச்சக்கரவண்டியில் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்தினர் கொண்ணையன் குடியிருப்புக்கு திரும்பி வரும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓலைத்தொடுவாய் வீதி ஊடாக முச்சக்கரவண்டி திரும்பியபோது, அதனை தலைமன்னாரிலிருந்து மன்னார் நோக்கி வந்து கொண்டிருந்த மீன் ஏற்றும் கூலர் வாகனம் பின்பக்கமாக மோதியுள்ளது. இதனால் முச்சக்கரவண்டி வீதியிலிருந்து தூக்கி வீசப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணம் செய்த அனைவரும் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அதில் 6 வயதுச் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

மன்னார் கொண்ணையன் குடியிருப்பைச் சேர்ந்த கெபின்கரன் (வயது -6) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான். சிறுவனின் தாயாரான சந்தியோகு செல்வி (வயது-30), சகோதரனான கானோர் ( வயது-1) ஆகியோருடன், முச்சக்கரவண்டிச் சாரதியும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கூலர் வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஓ.56)

### குருந்தூர்...

40க்கும் மேற்பட்ட பிக்குகளுடன் இணைந்து நேற்றுமுன்தினம் சென்றுள்ளனர்.

முன்னதாக இலங்கையின் சுதந்திர தினநாளான கடந்த 4 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் குருந்தூர் மலைக்கு சென்றிருந்தனர். இந்த நிலையில் அதற்கு மறுநாளான நேற்றுமுன்தினம் அமைச்சர்களின் இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது.

ஹெப்பெற்றிக்கொலாவ, மணலாறு, அரிசிமலை பகுதிகளை சேர்ந்த பிக்குகள் 40 பேருக்கும் மேற்பட்டவர்கள் இணைந்து அமைச்சர்களோடு குருந்தூர் மலையில் இரவு 7 மணி தொடக்கம் நள்ளிரவுவரை 'பிரித்' ஓதி வழிபாடுகளில் ஈடுபட்டனர் என அறியமுடிகிறது. (அ-ஓ.இ)

### வடக்கில்...

தெரிவித்ததாவது:-

காலபோகத்தில் வடக்கில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கர் பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதிலிருந்து வழமையாக மூன்றரை லட்சம் மெற்றிக் தொன் அளவு விளைச்சலை பெறக் கூடியதாக இருக்கும். ஆனால் கடந்த போகத்தில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் விவசாயிகள் பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். இதனால் விளைச்சல் குறைவடைந்துள்ளது. சுமார் இரண்டு லட்சம் மெற்றிக் தொன் அளவான விளைச்சலே கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

காலநிலை மாற்றமும் கடந்த போகத்தில் தாக்கம் செலுத்தியது. நூறு ஆண்டுகளின் பின்னர் ஒவ்வொரு மாவட்டங்களிலும் கிட்டத்தட்ட ஆயிரம் மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதுவும் குறுகிய காலத்தில் பெருமழை வீழ்ச்சி பதிவானமையால் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டது.

அதேபோன்று உரிய காலத்தில் சேதனப் பசளைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது. இதுவும் விளைச்சலில் தாக்கம் செலுத்தியுள்ளது - என்றார். (அ-ஓ.125)

### இந்திய...

இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு கொழும்பிலிருந்து அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இலங்கையின் 5 துறைமுகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான ட்ரோலர் படகுகளே இன்று முதல் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இந்த ஏலம் மு.ப. 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரை நடைபெறும்.

காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 65 படகுகளில், சுமார் 100 அடி நீளமான படகு ஒன்றையே அதிகளவானோர் பார்வையிட்டுள்ளனர். அந்தப் படகு உயர்ந்த விலைக்கு விற்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

நாளை 8 ஆம் திகதி காங்கேசன்துறையில் 5 படகுகளும், நாளை மறுதினம் 9ஆம் திகதி கிளிநொச்சி- கிராஞ்சியில் 24 படகுகளும், 10ஆம் திகதி தலைமன்னாரில் 9 படகுகளும், 11 ஆம் திகதி புத்தளம் கற்பிட்டியில் 2 படகுகளும் ஏலத்தில் விடப்படவுள்ளன. (அ-ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 10 நாள்களில் 222 உயிரிழப்புகள்!



கொழும்பு, பெப்.7
நாட்டில் ஜனவரி மாதம் 26ஆம் B இருந்து கடந்த 4ஆம் திகதி வரையான 10 நாள்களுக்குள் 222 கொரோனா உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

இதேநேரம், 10 நாள்களில் 10 ஆயிரத்து 651 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் வேகமாகப் பரவி வரும் ஒமிக்ரோன் மாறுபாடின் தன்மைக்கமைய, சமூகத்தில் நோய் அறிகுறியற்ற அல்லது லேசான அறிகுறியுடைய கொரோனாத் தொற்றாளர்கள் இருக்கலாம் என பிரதி சுகாதாரப் பணிப்பாளர் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்கு அனைவரும் சுகாதார ஆலோசனைகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

(எ-இ)


## துரித பொதிகள் சேவை



உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை
Australia : 1850/=
France : 1400/=
Germany : 1250/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
0777 554528

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி றோட் புன்னாலை கட்டுவன் சந்தியிலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதியில் இரண்டா வது காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 16 பரப்பு விற்பனைக்கு. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 KM தூரம். நல்ல சூழல்.
1 பரப்பின் விலை 10 இலட்சம், ஒன்பது இலட்சம், எட்டு இலட்சம்.
தொடர்பு: 077 6234 204

## காணி விற்பனைக்கு

ஊரெழு வடக்கு, பலாலி வீதி, வீரகத்திப் பிள்ளையார் கோவிலிருந்து 50 m தூரத்தில் அமைந்திருக்கும் 8 பரப்புக் காணி 2 பரப்பாக பிரித்து விற்கப்படும்.
076 940 1045
(cs.42755) (2.6)

## கடைகள் வாடகைக்கு

அகலம் 11 அடி நீளம் 44 அடி 5 கடைகள் உண்டு. தனித்தனியாக அல்லது முழுவதும் கொடுக்கப்படும். வாடகை முற்பணம் பேசித் தீர்க்கலாம்.
இடம்: சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள ஐயங்கரன் மணி மண்டபத்தில் இருந்து 200 மீற்றர் வட பக்கம் அமைந்துள்ளது.
தொடர்பு: 077 675 7249


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 13.06.1925
மறைவு 10.01.2022

கடந்த (10.01.2022) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
**கந்தையா கனகசபை**
(Retired Cooperative Inspector)

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

குடும்பத்தினர்
T.P.: 021 224 2166
(cs.42754) (2.7)

# மரண அறிவித்தல்

## திருமதி திருச்செல்வம் மரியம்மா (ராசமணி)



பிறப்பு:16.06.1935 இறப்பு:06.02.2022

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் யாழ். சுண்டுக்குழி றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருச்செல்வம் மரியம்மா அவர்கள் நேற்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற றப்பியேல் மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையா எலிசபேத் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னையா திருச்செல்வம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, றோசம்மா, தங்கச்சியம்மா, முத்தம்மா, ராசதுரை, அழகம்மா, செல்லம்மா மற்றும் றோசலின் (பொன்மணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரியஸ்ரெலா, காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் கமில்ரன், கிறிஸ்ரி ஜோண்சன், ஐசாக் நியூட்டன் மற்றும் மரினா, றொபின்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் ஜசிந்தா ரஞ்சினி, கௌசலியா, சிவநாதன், துஷ்யந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மேரி வசந்தினி, டென்சன் (லண்டன்), எட்வின்டன், பிறவின்டன் (லண்டன்), யூடிற் பரோசன், மைதிலி (லண்டன்), கபிஸ்ரன் பிறவின்சன், பிறட்டினிகா, பொனிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வின்ஷனிலா, வட்சன்சேவின், தரண்சிகா, கரிசன் (லண்டன்), யெருசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி புனித திரேசாள் ஆலயத்தில் இன்று (07.02.2022) திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புக்கு: 077 911 6282
(CS 18672) 1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.